# வாக்குமூலம்
## முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 88/2022 |
| வழக்கு சாட்சி | : | PW 1 |
| நாள் | : | 20.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அஞ்சலி | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | சங்கர் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர்

<u>**முதல் விசாரணை**</u> **:**

நான் பெரியகுப்பம் மேட்டு தெருவில் வசித்து வருகிறேன். இறந்த சாமுவேல் என்னுடைய மகன். நான் வீட்டு வேலை செய்து வருகிறேன். 29.09.2019 அன்று இரவு 9.00 மணிக்கு மேல் பால் வாங்கி வர சொல்லி அனுப்பினேன். என் மகனுடன் எழில் கண்ணன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சென்றார்கள். பால் வாங்க சென்ற போது வழியில் இ.பி அலுவலகத்தில் சென்ற போது அங்கு பொன்ராஜ் என்ற நபர் இருந்தார். எதிரி சாமுவேல்–யிடம் சிகிரேட் வாங்கிவர என்று சொல்லியுள்ளார். அதற்கு சாமுவேல் நான் ஏன் சிகிரேட் வாங்கி தர வேண்டும் என்று அவர் கூறினார். நான் சொன்னால் வாங்கி தர மாட்டியா நான் யார் என்று தெரியாதா என்று சொல்லியுள்ளார். மீண்டும் திரும்ப திரும்ப சண்டை வந்துள்ளது என்றும், அப்போது எழில் கண்ணன், கிருஷ்ணமூர்த்தி இந்த சண்டையை தடுத்துள்ளனர். அதை மீறி எதிரி காரில் உள்ள கத்தியை எடுத்து என் மகனை குத்திவிட்டார். எதிரியும் என் மகனும் பழைய வண்டியை வாங்கி விற்கும் தொழில் செய்து வந்துள்ளனர். அதில் பணம் பிரச்சனை காரணமாக என் மகன் தனியாக வந்து தொழில் செய்து வந்தார். அந்த முன்விரோத காரணமாக தான் அவர் கொலை செய்துவிட்டார். என் வீட்டின் அருகே இருந்த நபர் சாமுவேலை, பொன்ராஜ் குத்திவிட்டதாக சொன்னார்கள். அவர் பெயர் சுகுமார். அவர் கேட்டபோது திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு

அழைத்து சென்றுள்ளதாக கூறினார். அங்கு போய் பார்த்த போது என் மகன் இறந்துவிட்டிருந்தார். நான் பார்த்த போது என் மகனின் பிரேதத்தை சவகிடங்கில் வைத்திருந்தார்கள். நான் சவகிடங்கில் சென்று என் மகனின் பிரேத்தை பார்த்தேன். இடதுபக்க மார்பில் கத்தி குத்து இருந்தது. அதன் பிறகு அன்று இரவு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அடுத்த நாள் அதிகாலை 2.00 மணிக்கு திருவள்ளூர் டவுன் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். புகாரில் பொன்ராஜ் என் மகனை கொலை செய்துவிட்டதாக கொடுத்தேன். அந்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் படிக்கவில்லை. புகாரை நான் எழுதவில்லை. அங்கு இருந்த நபர்கள் தான் எழுதினார்கள். அதில் என்ன விவரம் உள்ளது என்பது எனக்கு தெரியாது. என் மகன் இறப்பிற்கு முன்பு எந்த தொழிலும் செய்யவில்லை என்றால் சரியல்ல அவர் தொழில் செய்து வந்தார். என் மகனும், எதிரியும் வியாபாரம் செய்து வந்தார்கள். கொலை நடப்பதற்கு முன்பு அவர்களுக்கு முன் விரோதம் இருந்தது. வழக்கு சம்மந்தமாக நான் புகார் கொடுத்த பிறகு போலிசார் எனைன விசாரணை செய்தார்கள். சம்பவம் நடந்த மறுநாள் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். என் மகன் மற்றும் எழில் கண்ணன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இரு சக்கர வாகனத்தில் சென்றதாக நான் போலிஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை. என் வீட்டிலிருந்து இ.பி அலுவலகத்திற்கும் 1/2km துரம் தான் உள்ளது. இ.பி அலுவலகத்திற்கும் காவல் நிலையம் சுமார் 1/2 மணி நேரத்திற்குள் நடந்து செல்லலாம். எதிரி மற்றும் எழில் கண்ணன், கிருஷ்ணமூர்த்தி, என் மகன் ஆகியோர்கள் நண்பர்கள் என்றால் சரிதான். என் மகன் இறந்த விபரத்தை எழில் கண்ணன், கிருஷ்ணமூர்த்தி தான் சொன்னார்கள். எதிரி என் மகன் நண்பர் என்றாலும் அவருக்கும் என் மகனுக்கும் எந்த வித முன்விரோதம் இல்லை என்றாலும் பைக் எடுத்தது சம்மந்தமாக என் மகனுக்கு பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. பைக்

எடுத்தது சம்மந்தமாக  என் மகனுக்கு முன்விரோதம் இருந்து அதனால் அவர் கொலை செய்யப்பட்டார் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 88/2022 |
| வழக்கு சாட்சி | : | PW 2 |
| நாள் | : | 20.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தேவகிருபை | ஜாதி | : | |
| தந்தை–பெயர் | : | சங்கர் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர்

**<u>முதல் விசாரணை</u> :**

நான் பெரியகுப்பம் மேட்டு தெருவில் வசித்து வருகிறேன். நான் திருவள்ளுர் ராஜாஜிபுரம் சித்தா கிளினிக்–ல் மருத்துவருடன் உதவி செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அம்மா. இறந்த நபரான சாமுவேல் என்னுடைய அண்ணன் ஆவார். 29.09.2019 அன்று இரவு பால் வாங்குவதற்காக அண்ணனும், எழில்கண்ணன் மற்றும் கிருஷ்ணமூர்த்தியும் சென்றார்கள். இரவு 9.30 மணிக்கு மேல் 11.00 மணிக்குள் எங்கள் வீட்டு அருகே வசிப்பவர்கள் பொன்ராஜ் என்பவர் என் அண்ணனை குத்திவிட்டதாக சொன்னார்கள். நான் எனது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து திருவள்ளுர் அரசு மருத்துவமனைக்கு நானும், என் அம்மாவும் சென்றோம். நான் அங்கு சென்று பார்த்த போது அண்ணன் இருந்துகிடந்தார். நான் அரசு மருத்துவமனை சவகிடங்கில் பார்த்தேன். இடது புற மார்பில் கத்தி குத்து காயம் இருந்தது. என் அண்ணனுடன் இருந்த எழில்கண்ணன் மற்றும் கிருஷ்ணமூர்த்தியும் பொன்ராஜ் என்பவர் காரில் இருந்திருந்தார் என் அண்ணனிடம் சிகிரேட் வாங்கி தர கேட்டுள்ளார் என் அண்ணன் முடியாது என்று சொல்லியுள்ளார். அதற்கு பொன்ராஜ் நான் இந்த ஏரியா ரவுடி நான் சொல்வது வாங்கி தர மாட்டியா என வாய்தகராறு ஏற்பட்டு கிருஷ்ணமூர்த்தி, எழில்கண்ணன் சண்டை வேண்டாம்

என சண்டையை பிரித்து விட்டனர். அதையும் மீறி பொண்ராஜ் கத்தியை எடுத்து குத்திவிட்டதாக சொன்னார்கள். அடுத்த நாள் அதிகாலை காவல நிலையத்திற்கு என் அம்மா சென்று புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.